# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-2 | Date : 03.09.2024

Case No. : **O.S. 494**/2019 | Nationality : Indian

Name : வினோத்கண்ணா(கிராம நிர்வாக அலுவலர், துகிலி கிராமம்) | Religion :

Age : 39

Father's/Husband's Name :

Village :

Taluk :

<u>வா.சா.2</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததின்பேரில் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு வட்டாட்சியரிடம் அனுமதி கடிதம் எதுவும் பெற்றேனா என்றால் இல்லை. போன் மூலமாக தகவல் சொன்னேன். நீதிமன்ற அழைப்பாணையில் எந்த பசலிக்குரிய சிட்டா, அடங்கலை எடுத்து வர வேண்டும் என்று குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நடப்பு பசலி என்னவென்றால் 1434 ஆகும். நான் எந்த பசலிக்கான அடங்கலை எடுத்து வந்தேன் என்றால் 1433 பசலிக்கான அடங்கலை எடுத்து வந்துள்ளேன். கடந்த 3 பசலி வருடங்களுக்கான அடங்கல் பதிவேடு எங்கள் அலுவலகத்தில் உள்ளது . அதனை எடுத்து வந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் செய்யலாம். சாசாஆ 1 "அ" பதிவேட்டில் அது எந்த வருடம் தயார் செய்யப்பட்டது என்பதற்கான குறிப்புகள் ஏதும் இல்லை என்றால் சரிதான். தற்போது வரை சாசாஆ 1 "அ" பதிவேட்டில் கோவிந்தராசு பெயரில்தான் உள்ளது என்றாலும் அதில்

திருத்தம் எதுவும் செய்யப்படவில்லை என்றாலும் சரிதான். சாசாஆ 2 சிட்டா ஆவணத்தில் கோவிந்தராசு பெயரில் இருந்து எதனடிப்படையில் ஜெயலெட்சுமி, மாதவி, கலைச்செல்வி, அஜித்குமார் ஆகியோர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்ற குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அதில் ந.க.எண் மற்றும் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ந.க.எண் மூலமாகதான் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளதா என்று அந்த உத்தரவை பார்த்தால்தான் தெரிய வரும். சாசாஆ 2 சிட்டா ஆவணத்தில் பசலி எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எந்தெந்த சர்வே எண்கள் குறித்து சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்தது என்றால் புல எண்கள் 204/2, 204/4 நஞ்சை மற்றும் புல எண்கள்204/3, 204/5 புஞ்சை குறித்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. பொதுவாக சொத்தில் என்ன பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது யாரால் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்பதை காட்டுவதற்கான ஆவணம்தான் அடங்கல் ஆவணம் என்றால் சரிதான். 1433 பசலி வருடத்தில் மேற்படி 4 சொத்துக்களிலும் எவ்வித சாகுபடியும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பசலிக்கான அடங்கல் பதிவேட்டில் புல எண்.204/5 ல் வேம்பு, தூங்குமூஞ்சி மரம் உள்ளது என்பதை தவிர வேறு குறிப்புகள் எழுதப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் 15 வருடங்களுக்கு மேலாக தரிசாக உள்ளது என்றால் சரியல்ல. 5 வருடங்களுக்கு மேலாக தரிசாக உள்ளது. பொதுவாக பட்டா அல்லது சிட்டாவில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றால் அதற்குரிய ஆவணங்களின் அடிப்படையில்தான் மாற்றம் செய்யப்படும் என்றால் சரிதான். கோவிந்தராசு பெயரில் இருந்து பட்டா எவ்வாறு மாற்றம் செய்யப்பட்டது என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பட்டா மாறுதல் உத்தரவு மண்டல துணை வட்டாட்சியரால் பிறப்பிக்கப்படும் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில்தான் வாரிசு சான்று வழங்கப்படும் என்றால் சரிதான்.

பிரதிவாதி அவரது தகப்பனார் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பதால் கோவிந்தராசு பெயரில் இருந்த பட்டாவை மாற்றம் செய்யக்கூடாது என கூறி வட்டாட்சியருக்கும் எனக்கும் அறிவிப்பு அனுப்பினார் என்றால் எனக்கு அவ்வாறு அறிவிப்பு அனுப்பவில்லை.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/-N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.